யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 12 சனிக்கிழமை (25-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 59

## விடுதலைப் புலிகளுடன்
# நிபந்தனை அற்ற பேச்சுக்கு அரசாங்கம் தயார் இல்லை!

## பி.பி.ஸிக்கு ஜனாதிபதி பேட்டி

லண்டன், ஜனவரி 25

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை இல்லாமல் பேசுவதற்கு அரசாங்கம் தயாரில்லை. தேவை ஏற்படின் நாம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கேற்ப பொருத்தமான வேளையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளக்கூடும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பி. பி. ஸி. சிங்களச் சேவைச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தேவையான போது, நிபந்தனையுடன் கூடிய பேச்சு வார்த்தைக்கு வருமாறு நாம் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுப்போம் -- என்றும் ஜனாதிபதி கூறினார்.

பேட்டியின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

கேள்வி: சிறிலங்காவின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவல் திட்டம் அதன் ஆரம்ப வடிவமைப்பில் இருந்து பல்வேறு உருவ மாற்றங்களைப் பெற்று தொடர்ந்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் ஆராயப் படுகிறது. இத் தீர்வுத் திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: எமது அரசியல் தீர்வுத் திட்டமானது கடந்த இரு ஆண்டுகளுக்குள் — மிகக் குறுகிய காலத்திற்குள் — முன்வைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக இடம் பெற்று வருவதும், பல்வேறு சிக்கல்களைக் கொண்டதுமான இந்தப் பிரச்சினைக்கு ஓராண்டுக்குள் தீர்வினைக் காண முடியாது. உதாரணமாக அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் அமைதி நடவடிக்கைகள் இவ்வளவு தூரத்திற்கு முன்னேற்றம் அடையவில்லை.

அதனோடு ஒப்பிடுகையில் நாங்கள் ஆட்சிக்கு வந்த ஓராண்டுக்குள் மிகவும் ஆழமான விரிவான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைத்துள்ளோம். இத் திட்டம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் கணிசமான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 6 படையினர் பலி!

கொழும்பு, ஜனவரி 25

திருகோணமலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் 6 படையினர் கொல்லப்பட்டனர்; 5 படையினர் காயமடைந்தனர்.

சேருவில — மீகொடவெவ பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

படையினர் அல்லக்கந்த வீதியால் ஸ்ரீ மங்களபுர கிராமத்துக்குச் சென்று கொண்டிருந்த சமயம் புலிகள் இவர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தியதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்த படையினரின் ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு புலிகள் சென்று விட்டதாகத் திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

(இ-3-4-10-150)

## ஹெலிக்கொப்டர் சேதம்!

கொழும்பு, ஜன. 25

நேற்று திருகோணமலையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்று சேதம் அடைந்தது.

சேருவில — மீகொடவெவ பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் வெலிகந்த மாதுறுஓயாப் பகுதியில் புலிகள் திரளுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து ''பெல் 212'' ரக ஹெலிக்கொப்டர்கள் இரண்டு புலிகளின் நிலைகள் மீது தாக்குதலில் ஈடுபட்டதாகவும் —

ஹெலிகளை நோக்கி புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் ஒரு ஹெலியின் என்ஜின் பகுதி சேதம் அடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சேதமடைந்த அந்தக் ஹெலிக்கொப்டர் பின்னர் படையினரின் பகுதியில் அவசரமாகத் தரை இறங்கியதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

(இ-3-4-10-150)

## பொலீஸ் காவல் நிலையம் மீது தாக்கு முறியடிப்பு என அரசு அறிவிப்பு

திருகோணமலை, ஜன. 25

வெலிகந்த பிள்ளையாரடி பொலீஸ் காவல் நிலையம் மீதும் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

6 படையினர் பலியான சேருவில — மீகொவெல பகுதியில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் பிள்ளையாரடி பொலீஸ் காவல் நிலையம் உள்ளது.

புலிகளின் தாக்குதலின் போது பொலீஸ் காவல் நிலையம் சேதமடைந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

சேத விவரம் ஏதுவும் கிடைக்கவில்லை.

இத் தாக்குதல் முறியடிக்கப்பட்டு விட்டதாக அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலின் போது வெலிகந்த பஸார் பகுதியில் மோட்டார் குண்டு ஒன்று விழுந்து வெடித்தது. சேத விவரம் தெரியவரவில்லை.

(இ-3-4-10-150)

## வாழைச்சேனைப் பகுதியில் தாக்குதல்

கொழும்பு, ஜன. 25

வாழைச்சேனை பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம் மீது நேற்று முன் தினம் இரவு புலிகள் தாக்குதல் நடத்தினர்.

பொலீஸார் பதில் தாக்குதல் நடத்தி இதனை முறியடித்து விட்டதாகவும் —

இந்தச் சண்டையின்போது புலிகள் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும்—

பொலீஸார் தரப்பில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

(இ-4)

### முச்சந்தி முரளி



உது தான் சொல்லுறது பாருங்கோ ஆனைக்கும் அடி சறுக்கும் எண்டு...!

## கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 25

திருகோணமலையில் இருந்து நாளை காங்கேசன் துறைக்கு வரும் பயணிகள் கப்பல் அன்றே திரும்ப விருக்கிறது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களில், பட்டியல் இலக்கம் 198 க்கு உட்பட்டவர்கள் இக்கப்பலில் பயணம் செய்யலாம் என்றும் —

இவர்கள் இந்த சந்தர்ப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பறவையுடன் மோதியே கிபிர் விழுந்தது!

### பூர்வாங்க விசாரணையில் தகவல்

கொழும்பு, ஜனவரி 25

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பு வாவியில் கிபிர் விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளானதுக்கு பறவை ஒன்றே காரணம் என்று விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்,

விமானி வெளியே பார்க்கத்தக்கதாக உள்ள கனோபி (Canopy) என்ற கருவி பறவை மோதியதால் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் தயாரிப்பான இந்த விமானம் வீழ்ந்தது குறித்து ஆராய இலங்கை வந்துள்ள இரண்டு இஸ்ரேலிய நிபுணர்களும் விசாரணைகளை ஆரம்பித்துள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான 29 பேரும் தொடர்ந்து விசாரணை

கொழும்பு, ஜன. 25

கிறீஸிலிருந்துநாடுகடத்தப்பட்ட 29 இலங்கையர்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்ததும் இவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக இத்தாலிக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்ல முயற்சித்த 149 இலங்கையர்களில் 50 பேர் மாத்திரமே தற்சமயம் உயிருடன் இருக்கின்றனர்.

இவர்களின் 29பேர் நேற்று முன்தினம் நாடு திரும்பினார்கள். ஏனையோர் விரைவில் இலங்கைக்கு அனுப்பப்படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில், சுழிபுரம் பகுதிகளில் இருவர் மரணம்; மூவர் காயம்

யாழ்ப்பாணம். ஜன. 25

கொக்குவிலிலும், சுழிபுரத்திலும்நேற்றுமுன்தினம்இடம்பெற்ற வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டனர், மூவர் காயம் அடைந்தனர்.

கொக்குவிலில் நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு இடம்பெற்ற சம்பவத்தில் இணுவில் மேற்கைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான இராசலிங்கம் இரத்தினசிங்கம் (வயது 45) என்பவர் உயிரிழந்தார்.

இவரது காலில் துப்பாக்கிச் சூட்டுக்கான காயம் காணப்பட்டது.

இறந்தவரின் சடலம் நேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் கணபதி துணை

## கரவை தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய ஏகதின இலட்சார்ச்சனை
## விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருஷம் தை மாதம் **26 — 01 — 97** ஞாயிற்றுக்கிழமை (13 ஆம் திகதி தமிழ்) காலை முதல் மாலை வரை இலட்சார்ச்சனை ஏக தினமாய் நடைபெற சிந்தாமணி விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடி இருப்பதால் அத்தருணம் அடியார்கள் ஆலயம் வந்து எம்பெருமானை வணங்கி அருள்பெற்றேகுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

ஆலயபரிபாலன சபையினரும்,
ஆலய 2 ஆம் திருவிழா உபயகாரர்களும்,
மா. கனகராசாவும்.

(44898)

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

உரும்பிராய் ஜன. 25

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கான மண்ணெண்ணெய் உரும்பிராய் பெற்றோல் நிலையத்தில் வழங்கப்படுகிறது.

(இ-154)

## விற்பனைக்கு


**தீராந்திகள்**
(Kampas Timber)
2'' x 4''  2'' x 6''
2'' x 5''  2'' x 7''

ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(44891)

## முதற் திருப்பலி நிறைவேற்றம்

**25-01-1997**



### அருட்திரு. தி. சூசைநாதர் அடிகளார்

எமது பங்கின் முதற்குருவாய் இறைவனால் தமது பணிக்கு அழைக்கப்பட்ட

**அருட்திரு. தி. சூசைநாதர் அடிகளாரை**

அவர் முதற் திருப்பலி நிறைவேற்றும் இந்நாளில், மறைபணியும் மனித மாண்பும் உயர நீண்ட நாள் பணியாற்ற இறையருள் நிறையப்பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

கச்சாயூர் மக்கள்
புனித பேதுருவானவர் ஆலயம்
கொடிகாமம்.

(சி/3998)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. க. செல்வரத்தினம்** ஆசிரியர்
அவர்களின் தந்தையார்

### அமரர் விசுவலிங்கம் கந்தசாமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்.
யா/ யூனியன் கல்லூரி.
யா/ பொன் பரமானந்தர் வித்தியாலயம்.

(44893)

## வாங்கலாம் விற்கலாம்

உதிரிப் பாகங்களுக்காக கசற்றேடியோக்கள், ரி.வி. டெக், மணிக்கூடுகள் போன்றவை வாங்கப்படும் விற்கப்படும். பழுது பார்த்தும் தரப்படும்.

**வீனஸ் டில்கா**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(44873)

## யா/யூனியன் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க
## பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் மாசிமாதம் 2ஆம் திகதி (02 - 02 - 1997) காலை 9-30 இலங்கை நேரம் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில், நிர்வாகசபைத் தெரிவும், சில முக்கிய விடயங்களும் ஆராய இருப்பதால் சகல அங்கத்தவரும், தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**- அதிபர்**

(44892)

## மக்களுக்காய் மரணித்த தோழனுக்கு

தாயின் மடியில்: 11 - 01 - 1969



தாயக மண்ணில்: 25 - 01 - 1996

### லெப்டினன்ட் இளையராஜா
### கந்தசாமி நகுலேந்திரன்
**(கல்வயல் மேற்கு, சாவகச்சேரி)**

சோதர வேட்டையை தொடர்ந்து நடத்தும்
பாசிசத்தை எதிர்த்து பலியான தோழனே!
மக்களுக்காய் மரணிப்பது
மலையைவிட வலியது.
இளையவனே! உன் மரணம்
இழப்பல்ல - உரமே!
என்றும் நீ மக்களோடிருந்தாய்;
என்றும் நாம் மக்களோடிருப்போம்!
என்றும் நீ மக்களுக்குள்ளிருப்பாய்!

இருள் விலகும், வாழ்வு சிறக்கும்
அந்த நாள் வரை பயணம் தொடரும்
சூளும் துன்பம் வீழும் வரைக்கும்
உந்தன் தோழர்கள் ஓயவே மாட்டார்
அஞ்சலி தோழா! இதய நினைவஞ்சலி!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
( ஈ.பி.டி.பி. )

(சி-3992)

## மரண அறிவித்தல்கள்

### தேவதாசன் யூட் நந்தகுமார்

பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.தேவதாசன் யூட் நந்தகுமார் 20 - 1 - 97 திங்கட்கிழமை டென்மார்க்கில் அகால மரணமானார்.

அன்னார் டென்மார்க்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நினாவின் அன்புக் கணவரும், செல்வன் பென்ஞமினின் பாசமிகு தந்தையும், திரு. தேவதாசன், திருமதி அனற்றோறி மேரிறோஸ் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், யூட்செல்வகுமாரி, யூட் விஜயகுமார், யூட்பத்மாகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சவிரிமுத்து செபமாலையின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று 25- 1- 97 சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

அன்னாரது அஞ்சலி நிகழ்வுகள் இன்று (25-1-97) சனிக்கிழமை கோப்பாயில் உள்ள எமது இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து மாலை 4. 30 மணிக்கு (பழைய நேரப்படி) கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலிப் பூசையும் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி சவிரிமுத்து செபமாலை**

மாதா கோயிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(44890)

### திருமதி நாகமித்திரன் கமலாம்பிகை

உரும்பிராயைச் சேர்ந்த திருமதி நாகமித்திரன் கமலாம்பிகை 24-1-97 அன்று இறைபதம் எய்தி விட்டார்.

இவர் நாகமித்திரன் அவர்களின் (இளைப்பாறிய நீதிமன்ற முதலியார்) அன்பு மனைவியும், சர்வேஸ்வரன் (ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை), விக்னேஸ்வரன் (ஆசிரியர், யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை), செல்வி மிருலாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ச. சரஸ்வதியின் அன்பு மாமியாரும், கஜானந்தின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-1-97) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**C.N. விக்னேஸ்வரன்**

ஸ்ரீராம்,
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(44895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து உன்னால் மகிமை பெற்றது!



ராகம்: பிருந்தாவன சாரங்கா தாளம்; ஆதி

பல்லவி

பாதம் பதித்த இடம் புனித முற்றது - இந்துப்
பள்ளித்தலம் உன்னால் மகிமை பெற்றது
(பாதம்)

அனுபல்லவி

வேத முரசறைந்து மீண்டு வந்தனை – அந்த
மேலை உலகளந்து ஈண்டு வந்தனை
(பாதம்)

சரணங்கள்

இந்து நெறியால் உலகுய்யும் என்றனை
எழுமின், விழிமின், முன்செல்க என்றனை
தொண்டர் அணியில் வந்து சேரும் என்றனை
தூய பணிகள் உள வாரும் என்றனை
(பாதம்)

சாதிப் பிரிவினைகள் போக முன் வந்தாய்-வெற்றுச்
சடங்குச் சலசலப்பு சாய முன் வந்தாய்
ஏழை எளிய மக்கள் வாழ முன் வந்தாய் - சிங்க
ஏறென்றிளைஞர் குலம் நிமிர முன் வந்தாய்
(பாதம்)

— சோ. பத்மநாதன்.

(சுவாமி விவேகானந்தர் யாழ். இந்துக்கல்லூரியில் சொற்பொழிவாற்றிய நூற்றாண்டு நினைவு இன்று.)

## விவேகானந்தரும் வாலிபரும்

கோடானு கோடிமக்கள் வறுமை தீமை
குருடாக்கும் அறியாமை இவற்றில் மூழ்கி
வாடாமல் வாடுகின்ற இழிவைப் போக்க
வாலிபனே! வா! என்றார் விவேகானந்தர்
தேடாமல் உன் ஆற்றல் தேயுமானால்
தேம்பி அழும் காலமுனைத் தேடிவரும்
நாடாமல் நலிவுகாணும் இளைஞனே
நல்லவனாய் நீமாற நன்மை செய்வாய்!

காரை எம். பி. அருளானந்தன்

# மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றாக்குறை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வடமராட்சிப் பகுதி அனைத்துக்குமே பிரதானமாக விளங்கும் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் மகப்பேற்று நிபுணர் முதல் வெளிநோயாளர் பிரிவு வைத்தியர்கள் வரை பற்றாக்குறையான நிலையே காணப்படுகிறது.

வெளிநோயாளர் பகுதிக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் தற்போது வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றும் டாக்டர்கள் தமது மதியபோசனத்தைக்கூட கவனியாது தொடர்ந்து சேவையாற்றி வருகின்றனர்.

சிகிச்சைக்காக காலையில் வரும் நோயாளர் மாலையே வீடு திரும்புகின்றனர்.

தற்போது இந்த வைத்திய சாலையில் மகப்பேற்று நிபுணர் எவரும் இல்லை. அவசர நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதே போல இங்கு இயங்கி வந்த மனநோயாளர் வார்ட்டுக்குப் பொறுப்பாக இருந்து சிகிச்சை அளித்து வந்த வைத்திய அதிகாரி கடந்த ஒருவாரத்தில் இருந்து தொடர் லீவில் இருப்பதால் மனநோயாளிகளுக்கான சிகிச்சையை மேற்கொள்ள முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

தற்போது இங்கு சிகிச்சைக்காக வரும் மனநோயாளிகள் வேறு ஆஸ்பத்திரிகளுக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

(இ-15)

## நூலகம் மீண்டும் இயங்கும்

சுன்னாகம் பிரதேச சபையினரால் உடுவில் கிழக்கில் நடத்தப்பட்டு வரும் பொதுசன நூலகம் விரைவில் செயல்படும்.

கடந்த வருடம் நடைபெற்ற மக்கள் இடம்பெயர்வுக்கு பின் நூலகம் மூடப்பட்டு அங்குள்ள நூல்கள் யாவும் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மேற்படி நூலகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நூல்கள் மீண்டும் இவ்வாரம் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

(இ-152)

## வலி. வடக்கில் வெற்றிலைச் செய்கையை ஊக்குவிக்க நிவாரண உதவி

வலிகாமம் தெற்கு, ஜன. 25

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் வெற்றிலைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட வெற்றிலை செய்கையாளர்களுக்கு கடந்த வாரம் ஊக்குவிப்பு நிவாரண நிதி உதவி வழங்கப்பட்டது.

மாதகல், கொல்லங்கலட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த அனுபவம் மிக்க ஐம்பதுக்கு அதிகமான வெற்றிலை செய்கையாளர்களுக்கு வெற்றிலை கொழுந்து பெறுவதற்கான நிதி உதவி வழங்கப்பட்டது.

(இ-152)

## விநியோகம்

யாழ். குடாநாட்டில் உள்ள கமநலசேவை நிலையங்களில் பல்வேறு வகையான மரக்கறி விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் போஞ்சி விதை மட்டும் விநியோகத்துக்கு என தருவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-15)

# இராணுவ ரீதியான அணுகு முறைகளே அரசியல் தீர்வு முயற்சிக்கு முட்டுக்கட்டை!

## பலப்பரீட்சைக்கே அது எப்பொழுதும் வழிவகுக்கும்

**"புதிய ஆண்டில் அரசியல் தீர்வை வலியுறுத்தும் பரந்தன் தாக்குதல்!" என்ற தலைப்பில் கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார இதழில் "இராஜதந்திரி" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.**

1997 ஆம் ஆண்டை கிழக்கில் ''றிவிஜெய'' இராணுவ நடவடிக்கை கட்டியம் கூறி வரவேற்றது.

இதனையடுத்து 'முற்றிலும் எதிர்பாராத விதமாக ஆனையிறவுக்கும். கிளிநொச்சிக்குமிடையே உள்ள பரந்தனில் புலிகள் தமது கைவரிசையை காட்டியிருந்தார்கள்.

பரந்தனில் இருந்த முகாமொன்று பலமான முறையில் தாக்கப்பட்டு, அங்கே ஏராளமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் பலர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் முதல் வாரத்திலேயே புலிகளின் பாய்ச்சல் உக்கிரமாக அமைந்திருந்ததையே பரந்தன்தாக்குதல் பறைசாற்றியது.

அத்துடன் ''சூரியப்பிரகாசம்'' ''உண்மைவெற்றி'' போன்ற இராணுவ நடவடிக்கைகளை நடத்தி வடக்கே தமது நிலையைப் பலப்படுத்திய பின்னர் படையினர் மீது விழுந்த 'அதிரடி' யாகவும் பரந்தன் தாக்குதல் காணப்படுகின்றது.

ஆனையிறவிலும், பரந்தனிலும் ஏக காலத்தில் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

ஆனையிறவு முகாம் ஏற்கனவே 1993 ஆம் ஆண்டில் புலிகளின் முற்றுகைக்குள்ளாகியிருந்தது. எனவே அதையொத்த முற்றுகையே மீண்டும் நிகழப்போகின்றதோ என படையினர் எண்ணியிருந்த வேளையிலேயே பரந்தன் படை முகாமுக்குள் புலிகளின் பல்வேறு அணிகள் ஊடுருவி நாசத்தை ஏற்படுத்தியுள்ளன.

### யுத்த தந்திரம்

ஆனையிறவை நோக்கியும், பரந்தனை நோக்கியும் ஏக காலத்தில் தாக்குதலை ஆரம்பித்துப் பின்னர் பரந்தனுக்குள் ஊடுருவியமை புலிகளின் யுத்த தந்திரத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இராணுவ வட்டாரங்கள் மூலம் கிடைக்கும் தகவல்களின்படி, கடந்த ஆண்டுமுல்லைத்தீவு முகாமைத்தாக்கி கைப்பற்றிய நெடுந்தூர ஆட்லறிப் பீரங்கிகளையே புலிகள் பரந்தன் முகாம்மீது பிரயோகித்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் புலிகள் தொடுத்த முதலாவது தாக்குதல் மட்டுமல்ல; பயங்கரமான தாக்குதலாகவும் பரந்தன் தாக்குதல் காணப்படுகின்றது.

மற்றொரு புறத்தில் புலிகளின் பலம் குறித்து தப்புக்கணக்கிடலாகாது என புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே எச்சரிப்பதாகவும் பரந்தன் விவகாரம் விளங்குகின்றது.

### கலதாரி கருத்தரங்கு

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கொழும்பு ''கலதாரி'' ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

இராஜதந்திர முக்கியஸ்தர்கள் பலரும் பங்குபற்றிய இக்கருத்தரங்கில் நீதி அரசியலமைப்புத்துறை அமைச்சரான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் உரையாற்றினார்.

பேராசிரியர் பீரிஸ் தமது உரையில், ''இப்புதிய ஆண்டு ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாக அமையும்; ஏனெனில் இந்த ஆண்டில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக்காண ஜனாதிபதி உறுதி பூண்டுள்ளார்'' எனத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று எட்டப்படாவிட்டால் இலங்கைக்கு ஓர் ஆரோக்கியமான எதிர்காலம் இருக்கப்போவதில்லை எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாத வரை இலங்கைக்கு ஓர் எதிர்காலமில்லை என்பதனை பேராசிரியர் பீரிஸ் கூறிமட்டும் தெரிய வேண்டியதில்லை.

எதிர்காலத்தை நோக்குகிறோம்; ஆனால் இலங்கையின் கடந்தகாலம், நிகழ்காலம் அனைத்துமே ஆரோக்கியமற்றவையாக இருந்து வருகின்றன. எனவே பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நிலைமைமேலும்மோசமடையும் என்பதே கண்கூடு.

### படையினரின் அடுத்த கட்ட நடவடிக்கை

வடக்கே பலாலியிலிருந்து கிளிநொச்சிவரை முன்னேறிய ஆயுதப்படையினரின் அடுத்தகட்ட நடவடிக்கை, வன்னியின் ஊடாகவவுனியா வரை முன்னேறுவதே என்றிருந்தது.

புலிகளைக் காட்டுக்குள் விரட்டி வன்னியூடாக வடற்கிற்கும் தெற்கிற்குமிடையே தொடர்பை ஏற்படுத்துவது எனவும் ஆயுதப்படையினர் கூறிவந்தனர்.

ஆனால் நிலைகொள்ளுமிடங்களிலெல்லாம் வேரூன்றிவிட முடியாது என்பதனையும், பின்வாங்கிச் சென்றாலும் புலிகள் படையினரை நிழலாகத் தொடர்ந்த வண்ணமுள்ளனர் என்பதையுமே பரந்தன் சம்பவம் தெளிவு படுத்தியுள்ளது.

''புலிகளின் பலம் குன்றியுள்ளது; அவர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்'' என்றெல்லாம் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அரசபடையினரின் பலம் எப்படியிருக்கின்றது? அவர்களின் பலத்தின் பின்னணியாக எது இருக்கின்றது? என்பவையெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகவுள்ளன.

புலிகளின் தாக்குதல் ஒன்று இடம் பெறும் பட்சத்தில் கடல், ஆகாய, தரை மார்க்கமாக முப்படைகளுமே உஷாரடையும் நிலையே தோன்றிவிடுகின்றது.

புலிகளின் தாக்குதல் ஆரம்பமானதும் தரைப்படைகள் செயலில் இறங்கும் அதே சமயம் வானத்தில் விமானங்களும், கடலில் கடற்படைக்கப்பல்களும் தோன்றிவிடுகின்றன.

எனவே புலிகளின் தாக்குதலைச் சமாளிப்பதென்பது அரச படையினரைப் பொறுத்தவரை பெரும் பாடாகவே இருக்கிறது.

அத்துடன் முப்படைகளும் ஒன்று கூடியே எந்தவொரு தாக்குதலானாலும், இராணுவ நடவடிக்கையானாலும் செயற்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் தரையில் பீரங்கிகளும், ஆகாயத்தில் விமானங்களும், கடலில் கப்பல்களும் புகைத்துத் தள்ளும் வேட்டுக்கள் குண்டுகள் என்பவற்றுடன் தரைப் படையினரின் வேட்டுக்கள் எனப் பெரும் எடுப்பில் படையினர் உஷாரடைவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் தனி ஒரு போராட்ட அமைப்பான புலிகள் இயக்கத்தைச் சமாளிப்பதற்கு முப்படையினரும் ஒன்று சேர்வதை நோக்கும் போது, ஆயுதப் படையினரின் பலம் கேள்விக்குரியதாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

தாக்குதல் ஒன்றில் இலங்கையின் முப்படையினரும் ஒன்று சேர முடியாதவிடத்து தோல்விகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டு வருவதையே உணர முடிகின்றது.

எனவே ஒவ்வொரு தாக்குதலுக்கும் முப்படைகளையும் ஒன்று திரட்ட வேண்டிய நிலை என்பது பெரும் பொருள் விரயத்தையே ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது.

கடந்த ஆண்டில் யுத்தச் செலவாக 4 ஆயிரத்து 650 கோடி ரூபாய்கள் கருகிச் சாம்பலாகியுள்ளன. இத்தொகை கடந்த 13 வருட கால யுத்தத்தில் ஒரு சாதனை அளவாகவும் இருக்கின்றது.

யுத்தமே நிரந்தரமாகிவிட்டால், இத்தொகை மேலும் அதிகரித்து, நாட்டின் அனைத்து மூலவளங்களுமே நாசமாகிவிடும்.

எனவே இந்த ஆண்டில் யுத்தத்தைத் தொடர அனு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம் ... மன்றம் யாழ்ப்பாணம்


# சுவாமி விவேகானந்தரது யாழ்ப்பாண வருகையின் நூற்றாண்டு விழா

## 1897-1997

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
காலம்: 1997 - 01 - 25 சனிக்கிழமை காலை 9.00 மணி

தலைவர்: மாநகர ஆணையாளர்
மங்கள விளக்கேற்றல்
சுவாமி விவேகானந்தரது திருவுருவப்பட திரைநீக்கம்
Dr. இ. தெய்வேந்திரன்
(தலைவர், சைவசமய விவகாரக்குழு)

பஜனை
யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மாணவர்கள்

கவிதாஞ்சலி
கவிஞர் காரை. எம். பி. அருளானந்தன்
(ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

தலைமையுரை
சிறப்புரை
திரு. இ. ராஜராமகேந்திரசிங்கம்
(இயக்குநர், இராமகிருஷ்ணாலயம்)

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாணவருகையின் நூற்றாண்டு ஞாபகார்த்த உரை
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(பதில்துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

பேச்சு சுவாமி விவேகானந்தர்
செல்வி சர்மிலா பத்மநாதன்
(யாழ். அருணோதயாக் கல்லூரி)

தெய்வீக இசையரங்கு
பாட்டு: திரு. எஸ். பத்மலிங்கம்
(தலைவர், இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
வயலின்: திரு. ஆர். இராதாகிருஷ்ணன்
மிருதங்கம்: திரு. எஸ். சிதம்பரநாதன்
தபேலா: திரு. பி. வரதன்

கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு

நாடகம்: "சங்கமம்"
வழங்குவோர்: யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்

நன்றியுரை
திரு. இ. இரத்தினசிங்கம்
(செயலாளர், சைவசமய விவகாரக்குழு)

மங்களம்: செல்வி இரஞ்சன் தாரணி
யா/வேம்படி மகளிர் கல்லூரி, மாணவி.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

சுவாமி விவேகானந்தர் யாழ். வருகை தந்த
100 ஆவது ஆண்டு விழா
சிறக்க வாழ்த்துவோர்
யாழ். இ. ச. பேரம்பலம் நிறுவனத்தார்
யாழ். எஸ். வி. சிவகுருநாதன் அன் கோ நிறுவனத்தார்

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
இல. 50, 52, 54
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வி. எம். சண்முகம்
எஸ்.வி.சிவகுருநாதன் அன். கோ
(ஏக விநியோகஸ்தர் ரெக்கிட் அன் கோல்மென், இலங்கை)
இல. 85 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3989)


## இராணுவ . .

(3 ஆம பக்கத் தொடர்ச்சி)

மதிப்பதா? அல்லது அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சிப்பதா? என்பதனை தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையே பரந்தன் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.

புலிகளின் பலம் குறைந்துவிட்டது; அரசியல் தீர்வொன்றுக்கு அவர்களின் அனுசரணை அவசியமில்லை என்ற மாயையிலும் ஆட்சியாளர்கள் காலங்கழித்துவிட முடியாது!

ஜனாதிபதி சந்திரிகா கூட புலிகளையோ அல்லது அந்த இயக்கத்தின் தலைவரான பிரபாகரனையோ முற்றுமுழுதாக நிராகரித்து விடாதவராகவே இருக்கின்றார்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பொது வைபவமொன்றில் கூட ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுகையில் இனப்பிரச்சினை பற்றிக் பிரஸ்தாபித்திருந்தார்.

அப்போது, அவர், "இன்றைய வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மேலும், மேலும் 'பிரபாகரன்கள்' தோன்றுவார்கள்" என்று கூறியிருந்தார்.

எனவே இனப்பிரச்சினையின் வெளிப்பாடாகவே புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் இருப்பதை ஜனாதிபதி உள்ளார்த்தமாக நன்கு உணர்ந்துள்ளார்.

ஆயினும் இனப்பிரச்சினையை ஆழவடுக்களாக மாற்றிவிட்டுள்ள - விட்டுக்கொடுக்காத மனப்பாங்கு ஆட்சி, அதிகாரங்களில் உள்ளோரிடம் காணப்படுவதாலேயே வடக்கு - கிழக்குப் பிரச்சினை ஒரு அருவருக்கத்தக்க நோயாக உருமாறியுள்ளதைக்காண முடிகிறது.

இன்றைய சூழ்நிலைகளை நோக்கும்போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கு இராணுவ ரீதியான அணுகுமுறைகளே ஒரு தடைக்கல்லாக இருந்து வருகின்றன.

இராணுவரீதியான நடவடிக்கைகள் தொடர்வதென்பது ஒரு பலப்பரீட்சைக்கே எப்போதும் வழியமைத்து நிற்கின்றது.

தினந்தோறும் பல உயிர்களோடு விளையாடும் இப்பலப்பரீட்சையினால் எவருக்கும் எதுவித பயனும் கிடைத்துவிடப்போவதில்லை.

### தெளிவான அரசியல் கண்ணோட்டம் தேவை

புலிகளை விரட்டவும், அவர்களை ஒடுக்கவுமே இராணுவ நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இந்த நோக்கங்களில் அரசு ஏற்றமும், இறக்கமுமான தன்மையே காணப்படுகின்றதே தவிர ஒரு நிரந்தர வெற்றியைக் காணமுடியாதுள்ளது.

இந்நிலையில் அநாவசியமானதெனக் கருதப்படும் இராணுவ முஸ்தீபுகளில் வெளிப்படுத்தும் அதீத அக்கறையைக் குறைத்து, தெளிவான அரசியல் கண்ணோட்டங்களுக்கே இடமளிக்க வேண்டும்.

ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வுபற்றிப் பேசலாம்; ஜனாதிபதி கூறியது போல இந்த ஆண்டு முக்கியத்துவம் மிக்க அரசியல் திருப்பங்களுக்கும் வழியமைக்கலாம்.

ஆனால் காலத்துக்குக் காலம் தமது இலக்குகளை வெற்றிகரமாகத் தாக்கி வரும்புலிகளைத் தொடர்ந்து தப்புக்கணக்கைப் போடுவதைத் தவிர்க்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

பரந்தன் தாக்குதலுக்குப் 'பதிலடி' என்று இராணுவத்தைத் தயார் செய்வதை விட, அரசியல் பலத்தைப் பிரயோகித்து இனிமேலும் தாக்குதல் இடம்பெறுவதைத் தவிர்ப்பதே அறிவுபூர்வமான செயலாக அமைய முடியும். ★


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ். கிளைத் தலைமையகம்

## சுயதொழிற் பயிற்சி நெறிகள்

எமது சங்கம், தேசிய கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் ஆரம்பிக்கவுள்ள கீழ்க்காணும் பயிற்சி நெறிகளுக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

1. தட்டச்சு/ சுருக்கெழுத்து — தமிழ்,
2. தட்டச்சு/ சுருக்கெழுத்து — ஆங்கிலம்,
3. ஆங்கிலப்பாடம்.

சுய விவரங்களுடன், சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து 05 - 02 - 1997-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

நேர்முகப் பரீட்சைக்கு தகுதியுடையோர் கடித மூலம் அழைக்கப்படுவர்.

கௌரவ செயலாளர்,
24 - 01 - 97.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3996)



# சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ். நல்லூர்
இந்து இளைஞர் மாணவ மன்றம்,
நல்லூர்.

25 - 01 - 1997 அன்று நடைபெற இருந்த எமது சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை எமது வாசகர்களுக்கும், வாணிபர்களுக்கும் அறியத்தருகின்றோம். சீட்டு இழுப்பு எதிர்வரும் தமிழர் புத்தாண்டு தினத்தன்று (14 - 4 - 97) நடைபெறும் என்பதனை தெரிவிக்கின்றோம்.

அ. க. துரைசிங்கம்
செயலாளர்.

(44830)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை **பவானிதேவி சிவபாலன்** அவர்களின் தந்தை

## பொன்னம்பலம் மகாராசாவின்

மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/திருக்குடும்ப கன்னியர்மட
ஆங்கிலப் பாடசாலை,

(44889)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 08 — 08 — 1960



உதிர்வு: 26 — 12 — 1996

## திருமதி கௌரி சுந்தரமூர்த்தி

(ஆசிரியை, யா/ இணுவில் மத்திய கல்லூரி)

கண்களில் உங்கள் சாந்தசொரூபம். காதினில் உங்கள் இனியகுரல். எண்ணிட அனலாய் உருகுதே எங்கள் நெஞ்சம். எதைச் சொல்லி ஆறுவது? எப்படி ஆறலாம்? இதைத்தான் விதியென்று கூறி ஆறலாமா? எங்கள் குல விளக்கே! 26 - 12 - 96 திடீரென மறைந்த எங்கள் குல விளக்கின் மறைவினை ஒட்டி அனுதாபமும் ஆறுதலும் வழங்கிய அனைவருக்கும் நன்றி நவில்வதோடு 25 - 01 - 97 சனிக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய வைபவத்தில் கலந்து அன்னவரின் ஆத்ம சாந்தியின் பொருட்டுப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்

இளந்தாரி கோயிலடி,
இணுவில் கிழக்கு.

(44887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரன் கைது செய்யப்பட்டார்!

சென்னை, ஜன. 25

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் எனக் கூறப்படும் வி. என். சுதாகரன் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அதிகாரிகளால் பழனியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைச் சேர்த்தார் என ஜெயலலிதா மீது தொடரப்பட்ட வழக்குகளில் சுதாகரனும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்- சுதாகரன் சென்னைக்கு கொண்டுவரப்பட்டு முதன்மை அமர்வு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுதாகரனுக்கும் சிவாஜி கணேசனின் பேர்த்தி சத்தியலட்சுமிக்கும் நடைபெற்ற ஆடம்பரத் திருமணம் தொடர்பாக சிவாஜி கணேசனிடமும் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தி இருந்தனர்.

சிவாஜி கணேசனின் புதல்வர்களான ராம்குமார், பிரபு ஆகியோரும் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர்.

தற்பொழுது சுதாகரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

(இ-10)

## சந்திப்பு

ஐ. நா. பொதுச் செயலர் கொபி அனான் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனை நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

ஐ. நா. சபைக்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய நிதிப் பங்களிப்புப் பாக்கியைத் தாமதமின்றி செலுத்துமாறு அதிபர் கிளின்ரனிடம் அவர் கோரியதாகத் தெரிகிறது.

ஆனால் அமெரிக்கா விரும்பும் சில நிர்வாகச் சீர்திருத்தங்களை ஐ நா. சபை நிறைவேற்றினால் மட்டுமே நிதி வழங்கப்படும் என கிளின்ரன் தெரிவித்திருக்கின்றார்.

## 2,025 ஆம் ஆண்டில் குடிதண்ணீர் பிரச்சினை

### ஐ. நா. அபி. பிரிவு எச்சரிக்கை

அவசர நடவடிக்கைகள் இப்போதே மேற்கொள்ளாவிடின் 2 ஆயிரத்து 25 ஆம் ஆண்டில் உலகில் 550 கோடி மக்கள் போதிய, தூய்மையான குடி தண்ணீர் வசதியின்றி அவதியுற நேரிடும்.

இப்படி ஐ. நா. சபையின் அபிவிருத்திப் பிரிவு எச்சரித்துள்ளது.

பலவகைப்பட்ட இரசாயனக் கழிவுகளால் உலகெங்கும் தண்ணீரின் தரம் வேகமாக மோசமடைந்து வருகின்றது என தெரிவிக்கும் அதன் அறிக்கையில் தண்ணீரின் தரமானது விவசாயத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் விளக்கியுள்ளது.

(இ-10)

## உலக அரங்கில்

### எயிட்ஸ் நோய்க்கு மருந்து

எயிட்ஸ் நோயை எதிர் கொள்ளும் பீரதோனேரிவோ - 56 என்ற மாத்திரையை தென் ஆபிரிக்க மருத்துவ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

கடந்த ஆறுமாதங்களாக எயிட்ஸ் நோயாளிகளுக்கு இந்த மாத்திரையை வழங்கி மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் அபார முன்னேற்ற அறிகுறிகள் தென்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த மாத்திரை எயிட்ஸ் நோயாளிகளுக்கு புதிய நம்பிக்கையின் ஆரம்பம் என தென் ஆபிரிக்கப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

(இ-10)

## இந்திய எம். பிக்களுக்கு ஞாபகசக்தி குளிகை!

புதுடில்லி, ஜனவரி 25

ஞாபக மறதியுடைய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஞாபகசக்தியை ஊக்குவிக்கும் ''மெமறி பிளஸ்'' என்னும் மாத்திரை வழங்கப்படுகின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் இந்த மாத்திரையை விரும்பிப் பயன்படுத்துவார் என வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது.

(இ-10)

## பாட்டாளி மக்கள் கட்சியின் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு

சென்னை, ஜன. 25

பெப்ரவரி முதலாம் திகதி பாட்டாளி மக்கள்கட்சி ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு ஒன்றை சென்னையில் நடத்தவிருக்கின்றது.

அந்த மாநாட்டில் பேசுபவர்கள் விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவிப்பதையும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசுவதையும் தவிர்த்துக்கொள்ளும்படி அந்தக் கட்சியின் தலைவர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழமக்களின் மொத்த நலனைக் கருத்திற் கொண்டு அவர்களுடைய பாதுகாப்புக்காகவே உரைகள் நிகழ்த்த வேண்டுமேயன்றி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தரும் வகையில் உரைகள் அமைந்தும் விடக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

(இ-4)

## சுதந்திர பலஸ்தீன நாடு: நத்தனியாகு எச்சரிக்கை

''சுதந்திர பலஸ்தீன நாடு தன்னிச்சையாக ஏற்படுத்தப் பட்டால் அது அமைதி உடன்பாடுகளை மீறுவதாக அமையும்.''

இப்படி இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகு எச்சரித்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கையை பலஸ்தீன விடுதலை அமைப்பு மேற்கொள்ள முன்வந்தால் அதற்கு எதிரான நடவடிக்கைத் திட்டம் தன்னிடம் தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

இஸ்ரேல் ஆட்சேபித்தாலும் பலஸ்தீன நாட்டைப் பிரகடனப்படுத்துவதே தனது இறுதி இலக்கு என பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் கடந்த புதனன்று கெய்ரோவில் தெரிவித்தார்.

(இ-10)

## 135 மதக் குழுக்களுக்கு இந்தோனேஷியாவில் தடை

ஜகார்த்தா, ஜன. 25

இந்தோனேஷிய அரசு 135 மதக்குழுக்களையும் பிரிவுகளையும் தடைசெய்துள்ளது.

புற்றீசல் போல் முளைக்கும் இக்குழுக்களும் பிரிவுகளும் மத அமைதிக்கு குந்தகம் விளைவிக்கின்றன எனக் காரணம் கூறப்படுகிறது.

ஐந்து மதங்களை மாத்திரமே இந்தோனேஷிய அரசியல் சட்டம் அனுமதித்துள்ளது. இஸ்லாம், கத்தோலிக்க கிறிஸ்தவம், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம், பௌத்தம், மற்றும் இந்து மதம் ஆகியனவற்றையே அரசியல் சட்டம் அனுமதித்துள்ளது.

(இ- 10)

## 'போயிங் 747' ஜம்போ ஜெட் விமான உற்பத்தி நிறுத்தம்

லண்டன், ஜன. 25

போயிங் விமானங்களை உற்பத்தி செய்து வரும் நிறுவனம் தனது புதிய தயாரிப்பான பாரிய ''போயிங் 747'' ரக ஜம்போ ஜெட் விமான உற்பத்தியைக் கைவிட்டுள்ளது.

இந்த ரக விமானங்களை விற்க முடியுமா என்ற சந்தேகமே உற்பத்தியைக் கைவிடக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்த விமானத்தின் விலை சுமார் 700 கோடி அமெரிக்க டொலர்கள் ஆகும். இந்த விமானத்தில் 550 பேருக்கு மேல் பிரயாணம் செய்யலாம். இதைவிட தரையிறங்காமல் 13 ஆயிரம் கிலோ மீற்றர் விண்ணில் இந்த விமானத்தால் பறக்க முடியும். இந்த விமான உற்பத்தியை அந்த நிறுவனம் கைவிட்டதால் சுமார் 5 ஆயிரம் ஊழியர்கள் வேறு வேலைகளைத் தேடிச் செல்லவேண்டி நேரிட்டுள்ளது.

இதற்கிடையில் போயிங் நிறுவனத்துக்கு போட்டி நிறுவனமாக ஐரோப்பாவில் அமைந்துள்ள ''எயர் பஸ்'' நிறுவனம் 600 பேர் பயணம் செய்யக்கூடிய சுப்பர் ஜம்போ ஜெட் விமான உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

அந்த விமானத்தை 2003 ஆம் ஆண்டளவில் சேவையில் ஈடுபடுத்தக் கூடியதாக இருக்கும் என அந்த நிறுவனம் தெரிவிக்கிறது.

## சகலரும் ஆதரவு அளித்தால் யுத்தம் முடிவுக்கு வரும்

கொழும்பு, ஜன 25

அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு சகல தரப்பினரும் ஆதரவளித்தால் வடக்கு—கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு — கிழக்கு யுத்தத்தினால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த யுத்தத்துக்காக ஏறத்தாழ 4 ஆயிரத்து 500 கோடி ரூபாவை வருடா வருடம் செலவிடுகின்றது என்றும் —

பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் தீர்வு யோசனை சகல சமூகங்களுக்கிடையேயும் அமைதியையும் ஒற்றுமையையும் மீண்டும் ஏற்படுத்துமுகமாக சமர்ப்பிக்கப்படும் என்றும் — ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## இன்று எழுச்சி விழா

யாழ்ப்பாணம் ஜன. 25

சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு புலோலி அபிவிருத்திக் கழகமும் புற்றளை சைவ மன்றமும் இணைந்து நடத்தும் எழுச்சிவிழா ஊர்வலம் இன்று பி.ப. 3.30 மணிக்கு புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும். சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படம் மங்களவாத்தியங்கள் முழங்க பஜனையுடன் ஊர்வலமாக வடமராட்சி இந்துமகளிர் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்படும்.

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் விழா நடைபெறும். ஏ. என். எஸ். திருச்செல்வம் வரவேற்புரை நிகழ்த்துவார். வட இந்துமகளிர் கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

சுவாமி விவேகானந்தர்பற்றிய சொற்பொழிவுகள், பக்தி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் [illegible] கூட்டத்தில் இடம் பெறும்.

(அ)

## பளைப் பகுதியில் காய்ச்சல் வேகமாகப் பரவுகின்றது

தென்மராட்சி, ஜன. 25

பளைப் பிரதேசத்தில் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

தினமும் நூற்றுக்கணக்கானோர் பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காய்ச்சலால் பீடிக்கப் பட்டவர்களால் ஆஸ்பத்திரி வார்ட்டுகள், விறாந்தைகள் நிரம்பி வழிகின்றன. வார்ட்டுகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பலர் உரிய மருந்துகளை பெற்றுக் கொண்டு வீடுகளுக்கு செல்வதைக் காண முடிகிறது.

வெளிநோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பதை அடுத்து வெளிநோயாளர் பிரிவு காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை தொடர்ந்து இயங்குகிறது.

வெளிநோயாளர் பிரிவு, வார்ட், பிரசவ விடுதி நோயாளர் ஆகியவற்றை ஒரு டாக்டர் மட்டுமே கவனித்து வருகிறார்.

(இ-117)

## கடிதங்களுக்குள் வேறு ஒன்றும் வைக்கக்கூடாது என அறிவுறுத்து

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களினுள் குறிப்பிட்ட சில பொருள்களை வைத்து அனுப்புவதை முற்றாகத் தவிர்க்குமாறு வடபிராந்திய பதில் அஞ்சல் அதிபர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

ஊசிவகைகள், உலோகப் பொருள்கள், உலோகத்தாலான கிளிப் வகைகள், காபன்கடதாசி, விபூதி மற்றும் நூல்வகைகள் என்பவற்றை கடிதங்களினுள் வைத்து அனுப்புவதனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக படையினர் அக்கடிதங்களை முற்றாக திறந்து பார்க்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் —

இதனைத் தவிர்ப்பதன் மூலம், அக்கடிதங்கள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உரியவர்களை சென்ற[illegible]யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(இ-5)

## தேடும் முயற்சி கைவிடப்பட்டது

பலாலியில் இருந்து புறப்பட்ட பின்னர் காணாமற் போன வை-12ரக இராணுவ போக்குவரத்து விமானத்தையும் அதில் இருந்த நான்கு படையினரையும் தேடும் முயற்சியை படையினர் கைவிட்டு விட்டதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது.

(இ-10)

## முக்கிய கிருமி நாசனிகள் இல்லை

வலி, தென்மேற்கு. ஜன. 25

விவசாயிகளுக்குரிய முக்கிய கிருமி நாசனி வகைகள் உடுவில், கீரிமலை, தொல்புரம் சமநல சேவை நிலையங்களில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் விவசாயிகள் அதிக விலை கொடுத்து தனியார் வர்த்தக நிலையங்களில் இக்கிருமி நாசனி வகைகளை கொள்வனவு செய்கின்றனர்.

(இ-145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணிவரை சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
(9194)

மரக்கறி பலசரக்குக் கடைக்கு உரிய தாபாடங்களும், ரயர் வண்டில்கள் இரண்டும், கென்வூட் குளிர் சாதனப்பெட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. விமலநாதன், இல. 16/12, விதானையார் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (44874)

இறைச்சிக் கோழிகள் (புறோயிலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.141, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(44875)

இறைச்சிக் கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Broiler Sales Centre Thirunelvely.
(9191)

கோயில் பாவனைக்கேற்ற இந்திய வெல்வெற் பட்டுக் குடைகள், சப்பற அலங்கார மணிகள், அட்டலட்சுமி பீடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வீ. சீ. முருகையா, இல. 19, யாழ்ப்பாண வீதி, சாவகச்சேரி.
(44877)

7 அங். X 4 அங். (நீளம் 14 அடி, 16 அடி), 6 அங். X 2 அங். (நீளம் 18 அடி) 5 அங். X 4 அங். (நீளம் 15 அடி) றங்கூன் தேக்கம் தீராந்திகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ப. கிருஷ்ணன், வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை (வட்டுக்கோட்டை சந்திக்கு அருகாமையில் (44881)

இறைச்சிக் கோழி (Brolier) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.15, மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை முன்பாக) (44883)

### வீடு வாடகைக்கு

இருபாலைச் சந்திக்கு அண்மையில், தபாற்கந்தோருக்கு முன்பாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு; யேசுதாசன் ஆசீர்வாதப்பர் ஆலயம், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(44833)

### வாடகைக்கு

பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் இரண்டு அறைகளுடன், சமையலறை, மலசலகூடம் ஆகியவற்றுக்கு தண்ணீர் [பைப்] வசதியுடைய வீடு இரண்டு வருட ஒப்பந்தத்தில் வாடகைக்கு உண்டு. அறிமுக சிபார்சு தேவை. விளம்பரதாரர், 28/2 மணல்தரை ஒழுங்கை. கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
(44878)

# வாழ்த்துகின்றோம்

## யா/கச்சாய் அ. த. க. பாடசாலை

30 வருட இடைவெளிக்குப்பின் ஆண்டு — 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

செல்வி பத்மநாதன் கிரிசாந்தியா — 136
செல்வன் சிவராஜா நகுசன் — 109
செல்வி சிவப்பிரகாசம் வித்தியாங்கனி — 104

இம் மாணவர்களின் வெற்றிக்கு வித்திட்ட அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சாவகச்சேரி கல்விக் கோட்ட முதன்மை ஆசிரியர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

**பாடசாலை அபிவிருத்திச்சபை**

யா/ கச்சாய் அ. த. க. பாடசாலை,
கொடிகாமம். (44882)

# சிறிய உழவு யந்திரங்கள் காணவில்லை

எமது சங்கத்துக்கு சொந்தமான இரண்டு சிறிய, இரண்டு சில்லு உழவுயந்திரங்கள் (லான்ட்மாஸ்ரர்கள்) பெட்டியுடன் தற்காலிக பணிமனை மீசாலை பொதுச்சந்தைக்கு அருகாமையில் 19-04-96 இல் நிறுத்தப்பட்டிருந்தவேளை இராணுவநடவடிக்கையின் போது காணாமல் போய்விட்டன. இது சம்பந்தமான விவரம் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். சரியான தகவல் தருவோருக்கு குறிப்பிட்ட சன்மானம் வழங்கப்படும்.

1. வாகன இல. — **72 சிறி 9445**
   யந்திர இல. — **65 - 548094**
   நிறம் — சிவப்பு குபாட்டா ஜப்பான்
2. புதியது சிவப்பு நிறம் ஜப்பான் குபாட்டா
   யந்திர இல. — RK. **80 - 921937**
   அடிச்சட்ட இல. — **931006**

**பொது முகாமையாளர்,**
**கோண்டாவில் பனை தென்னை வள அ. கூ. சங்கம்**
தாவடிச் சந்தி,
கோண்டாவில். (44876)

# திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# ★ சிற்பக் கண்காட்சி ★


## 25 - 01 - 1997

இன்றைய நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

இடம்:- மறைக்கல்வி நிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்:- காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

**பிரவேசம் இலவசம்**



# லாவண்யா



பல், முக்குக்
கண்ணாடி அகம்

**மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

டாக்டர் றெஜி சொலமன்
(சி/3987)

# 98, 99 A/L கலைப்பிரிவு

ஆரம்பமாகிவிட்டது

# 98, 99 A/L வர்த்தகப் பிரிவு

**ஆரம்பம் 01 - 02 - 97 (12 மணி)**

பொருளியல் — சண்
கணக்கியல் — கொலின்ஸ்
வர்த்தகம் — முரளி
வணிகபுள்ளிவிவரவியல் — இராஜேந்திரகுமார்

அனுமதிகளை 25 ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளவும்

# புதிய உயர் கல்லூரி

**ஆரியகுளம் சந்தி — யாழ்.**
(44863)

# வட இலங்கைச் சங்கீத சபை

# தேர்வுகள் 1997

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப் பப்படிவங்கள் **1997 — 01 — 24** வெள்ளிக்கிழமை முதல் சபைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்.

1996 ஆம் ஆண்டுத் தேர்வுக்காக சபையால் அச்சிடப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எவ்வகையிலேனும் தயாரிக்கப்பட்ட படிவங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 1997-02-28 வெள்ளிக்கிழமை**
முடிவுத்திகதியின் பின் எக்காரணத்தையிட்டும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது,

1997 ஆம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் வருமாறு:

தரம் I : ரூபா 50.00, தரம் II : ரூபா 75.00
தரம் III: ரூபா 100.00, தரம் IV: ரூபா 125.00
தரம் V : ரூபா 200.00, தரம் VI: (ஆசிரியதரம்): ரூபா 250.00

மேலதிக விவரங்களுக்கு சபைப்பணிமனையுடன் தொடர்பு கொள்க.

படிவம் ஒன்று (அறிவுறுத்தல் உட்பட) ரூபா 10.00

**கல்விப் பணிப்பாளரும் (வலயம் 01)**
**வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.**

வட இலங்கைச் சங்கீத சபை,
கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/3991)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்:** 15 — 06 — 1932



**மறைவு:** 06 — 02 — 1996

## அமரர் சிவசாமி பாலகிருஷ்ணன்

கண்ணை இமை காப்பது போல்
எம்மையெலாம் காத்த
ஒளிவிளக்கே! உத்தமரே!
உமை நினைந்து எமதுள்ளமெலாம்
உருகி வாழ ஓராண்டு வந்தும்
உன் நினைவால் வாடுகிறோம்.
சீர் தந்தாய் பேர்தந்தாய் சிறப்பும்
தந்த தெய்வத் திருவுருவே!
உன் பாத கமலங்கள் எப்போதுமிறைத் தவமே.

பிரிவால் துயருறும்;
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**உற்றார், உறவினர்.**

நுணாவில். (9196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ன்றம் யாழ்ப்பாணம்

# உதயன்

## மாறும் அட்டவணை

அதிகாரப் பரவல் திட்டத்தை ஆராய்ந்து — விவாதித்து — வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அத் திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் தனது பணியை ஆகப் பிந்தியது இவ் வருடம் பெப்ரவரி மாதத்தில் முடித்துவிடும். ஆகையால் அதிகாரப் பரவல் சட்ட வரைவு நிச்சயமாக மார்ச் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு அரசமைப்புத்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கடந்த வருடப் பிற்பகுதியில் அடித்துச் சொல்லத் தொடங்கிவிட்டார்.

பின்னர் இடையில், அதிகாரப் பரவல் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் மக்கள் கருத்தறிவதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்குவிடப்படும், ஜனாதிபதி ''அரசமைப்புப் புரட்சி'' ஒன்றைச் செய்யப் போகிறார் என்று அமைச்சர் பீரிஸ் பகிரங்கமாக அறிவித்தார்.

இதற்கிடையில் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலோடு சேர்த்து, அதிகாரப் பரவல் திட்டத்துக்கான கருத்துக் கணிப்பும் நடத்தப்படும் என்று கொழும்பில் பரவலாகப் பேசப்பட்டது. செய்திகளும் வெளிவந்தன.

நாடாளுமன்றத்துக்கோ கருத்துக் கணிப்புக்கோ எதற்காக இருப்பினும், அதிகாரப் பரவல் திட்டத்தின் உண்மையான வடிவம், இறுதி வரைவு மார்ச் மாதத்தில் தெரிய வந்துவிடும் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள்.

அது தங்களின் உரிமைகளை நியாய பூர்வமாக வழங்குகின்றதோ இல்லையோ, சரி, அது எந்த வடிவத்தில் இருக்கிறது என்பதனை அறிவதில் தமிழ் மக்களும் ஆர்வமாகவே இருந்தனர்.

ஆனால் தெரிவுக் குழுவின் பணிக்காலம் மேலும் இரண்டு மாதங்கள் — அதாவது மே மாதம் வரை — நீடிக்கப்பட்டுள்ளதாக இப்போது வந்திருக்கும் அறிவிப்புதமிழர்களுக்குப்பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

அதிகாரப் பரவல் திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணி மேலும் நீடிக்கப்படுவதற்கு, ஒத்தி வைக்கப்படுவதற்கு, பின் தள்ளப்படுவதற்கு, அட்டவணை மாற்றப்படுவதற்கு தமிழ்க்கட்சிகளிடம் ஜனாதிபதி தெரிவித்திருக்கும் காரணம் தெற்கில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் என்பதாகும்.

உள்ளூராட்சித் தேர்தலை சிறிது காலம் பின்தள்ளி தெரிவுக்குழு தனதுபணியை ஏற்கனவே எதிர்பார்த்தவாறு செய்து முடிக்க வகை செய்யலாமே என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கேட்டதற்கு ஜனாதிபதி இணங்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியே ஆகவேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் தெற்கில் இருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

உள்ளூராட்சித் தேர்தலை விட இனப்பிரச்சினைக்கான தீர்வு இரண்டாவதாகவே அரசாங்கத்தாலும் தெற்கில் ஏனையோராலும் நோக்கப்படுகிறது. இதற்கு மேலும், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று விரைவில் வரும் என்று நம்புவதற்கு இடமுண்டா?

---

தீர்வுத்திட்டத்தை நேரடியாக எதிர்க்காமல்

# இனவாத சக்திகளைத் தூண்டிவிட ஐ. தே. கவின் ஒரு பிரிவினர் திட்டம்

அரசின் அரசியல் தீர்வு யோசனைகளுக்குநேரடியான எதிர்ப்பைக் காட்டாமல், இனவாத அமைப்புக்களின் பிரசாரங்களைத் தூண்டிவிட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு பிரிவினர் முயன்று வருகின்றனர்.

மேற்கண்டவாறு கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் உள்ள லலித் பிரிவினரின் உதவியுடன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தீர்வு யோசனைகளைத் தோல்வி அடைய வைக்கவும் முயற்சிகள் நடக்கின்றன.

புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகும் போது தெற்கில் இனவாதச் சூழல் ஒன்றையும் தோற்றுவித்து ஆளும் தரப்புக்கு நெருக்கடி ஏற்படுத்துவதே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள தீவிரவாதப் பிரிவினரின் நோக்கம் என்று தெரிகிறது.

### லலித் பிரிவு

உள்ளூராட்சித் தேர்தல்களை தெற்கில் அரசு நடத்துமானால் லலித் பிரிவினரை தனியாகப் போட்டியிட வைக்கவும் எதிர்க்கட்சி பிரமுகர்கள் சிலர் முயற்சி செய்து வருகின்றனர்.

லலித் பிரிவினர் இனப் பிரச்சினைத் தீர்வில் கடும் போக்கையே மேற்கொள்ளுகின்றனர். வடக்கு - கிழக்கு இணைப்பு, ஒற்றையாட்சி முறையை மாற்றுதல்- இரண்டையும் அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இந்நிலையில் அரசியல் தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் ஒத்த கருத்து ஏற்பட இடமில்லை என்பது தெளிவாகி விட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசியல் தீர்வு யோசனை தம்மால்தான் தோல்விகண்டது என்று தமிழ் மக்கள் கருதி விடுவார்களோ என்று எதிர்க்கட்சி நினைக்கிறது.

அதனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் மேலும் தாமதத்தை ஏற்படுத்திக் கொண்டு, அரசாங்கத்துக்கு இனவாத அமைப்புக்கள் மூலம் அச்சுறுத்தல் விடுப்பது தான் எதிர்க்கட்சியின் தந்திரம்.

அரசாங்கமே தீர்வு யோசனைகளைக்கிடப்பில் போடக்கூடிய வகையில் இனவாத அமைப்பின் பிரசாரத்தைத் தூண்டிவிடப்போகிறார்கள்.

### தேர்தல் பிரசாரம்

அதே நேரம் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் ஆளும் தரப்பைப் பலவீனமாக்க, லலித் பிரிவினரை பயன்படுத்தும் திட்டமும் இருக்கிறது. திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி மூலமாக ஆளும் தரப்புக்கு எதிரான பிரசாரத்தை நடத்தினால் மக்களிடம் எடுபடும் என்று நினைக்கிறார்களாம்.

ஆளும் தரப்பில் இருந்த ஒருவர் மூலமாகவே அத்தரப்பைத் தாக்குவது பயன் தரும் என்று கருதப்படுகிறது. முக்கிய தருணத்தில் அமைச்சுப் பொறுப்பை உதறிவிட்டு ஸ்ரீ மணி வெளியே வருவார். பின்னர் தமிழ்க்கட்சிகளின் ஆதரவையே அரசாங்கம் நம்பியிருக்க வேண்டும்.

'தமிழ்க் கட்சிகளே ஆட்சி நடத்துகின்றன. அதனால் தான் தமிழர்களுக்கு நாட்டைத் தாரைவார்க்க நினைக்கிறது அரசாங்கம்' என்று இனவாத அமைப்புகள் பிரசாரம் செய்யவும் வாய்ப்பு ஏற்படும்.

அதனால் அரசாங்கத்தின் நிலை தர்மசங்கடமாகிவிடும் என்று கணக்குகள் போடப்படுகின்றன. எதிர்க்கட்சி வட்டாரத்திற்கு நெருக்கமான ஒருபிரமுகர் மூலமாக மேற்கண்ட தகவல்கள் கிடைத்துள்ளன.

மேற்கண்டவாறு அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மாணவருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்.ஜெய்ப்பூர் செயற்கை அவயவம் பொருத்திய பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி உதவித் திட்டத்தில் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

முன்னர் உதவி பெற்றவர்களும் அண்மைக் காலத்தில் செயற்கைஅவயவம் பொருத்தியவர்களும் பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் பழைய பூங்கா வீதி சுண்டுக்குளியிலுள்ள யாழ். ஜெய்ப்பூர் செயற்கை அவயவக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-4)

# ஆசிரியர்களுக்கு மேலும் $2\frac{1}{2}$ மாத ஆபத்து கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு ஜன 25

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலும் இரண்டரை மாத கால ஆபத்துக்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

1996 ஜூலை 17 முதல் 31 முடிய உள்ள அரை மாதத்துக்கும் நவம்பர், டிசம்பர் மாதத்துக்குமென இவை வழங்கப்பட உள்ளன.

கடந்த வாரம் உடுவில் கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டோபர் மாதத்துக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன.

அதேசமயம் யாழ். நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை கல்விக்கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் ஆபத்துக் காலக்கொடுப்பனவு கடந்த 21 ஆம் திகதி உரிய கல்விக் கோட்டங்களினால் வழங்கப்பட்டது.

வன்னிப் பிரதேசத்துக்கு சென்று மீளவும் திரும்பி வந்து கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு அவர்கள் கடமையேற்ற திகதியில் இருந்து இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

(இ-51-152)

# ஜனாதிபதி கூட்டும் மாநாடு 30 ஆம் திகதி

வவுனியா அகதி முகாமில் உள்ளவர்களின் நிலை, திருகோணமலை லிங்க நகரில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களின் நிலை ஆகியன தொடர்பாக ஆராய விசேட மாநாடு ஒன்று இம் மாதம் 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

கடந்த புதன்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்தே இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு திருகோணமலை, வவுனியா இராணுவ, பொலீஸ் அதிகாரிகள், அரச அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் வவுனியாவில் உள்ள 8000 அகதிகள் நிலை, லிங்க நகரில் இருந்து வெளியேற்றப்பட்ட 800 குடும்பங்களின் நிலை ஆகியன குறித்து ஆராயப் படவிருக்கின்றன.

(இ-3-150)

# விவேகானந்தர் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் தர இணையுங்கள்

## யாழ். மாநகர சமய விவகாரக் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 25

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துவதில் ஆர்வமுள்ளவர்களைத் தமக்கு ஆதரவு தந்து இணைந்து செயற்படுமாறு — யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு வேண்டுகோள் விடுத்துளளது.

சைவசமய விவகாரக் குழு யாழ். இராமகிருஷ்ணாலயத்துடன் இணைந்து நாவலர் கலாசாரமண்டபத்தில் இன்று நடத்தும் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குழுவின் தலைவர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளதாவது:-

சுவாமி விவேகானந்தர் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் வந்த பொழுது எழுச்சி மிகு கருத்துக்களை, மக்களுக்கு குறிப்பாக இளைஞர் யுவதிகளுக்கு வழங்கியிருக்கின்றார். அவரின் சிந்தனைகளும், அவர் வழங்கிய கருத்துக்களும் தற்பொழுது எமது மக்கள் இருக்கும் நிலையில் காலத்தின் தேவையாக அமைவதைக் காண்கின்றோம்.

கடந்த கால நிகழ்வுகளால் மனம் நொந்த நிலையில் தனி மனித சோர்வு நிலை, குடும்ப, சமூகச் சோர்வு நிலை ஏற்பட்டு எமது செயற்பாடுகள் முடங்கியிருக்கும் நிலையைக் காண்கின்றோம்.

இப்படியான கால கட்டத்தில் சுவாமியின் கருத்துக்கள் மனிதனுள் உள்ள சக்தியை வெளிக்கொண்டு வர உதவும். அதனால் எம் மக்களின் எதிர்காலம் நம்பிக்கையூட்டுவதாகவும், தன் வலிமையை உணர்ந்து செயற்படவும் உதவும்.

இதன் பிரதிபலிப்பாக எம் மக்களிடையே குறிப்பாக, இளம் சமுதாயத்தினரிடையே ஒரு மறுமலர்ச்சி தோன்ற வேண்டுமென்ற நோக்கில் இவ்விழாவை ஒழுங்கு செய்திருக்கின்றோம்.

இதன் தொடர் நடவடிக்கையாக இவ்வாண்டில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்த உத்தேசித்துள்ளோம்.

ஆர்வமுள்ள அனைவரும் எம்முடன் இணைந்து ஆதரவு தர வேண்டுகின்றோம்.

—என்று கோரப்பட்டுள்ளது.

**நாளை**

**தை 13**

**ஞாயிற்றுக்கிழமை**

திதி: திருதியை பின்இரவு 3 32 வரை.

நட்சத்திரம்: மகம் பிற்பகல் 3-57 வரை.

ராகுகாலம்: 5.06-6 36

சுபநேரம்: 9.36-11.06

([illegible] பழைய நேரப்படி)

## சிற்பக் கண்காட்சி

கொழும்புத்துறை, ஜன 25

திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிற்பக் கலைஞர் ஏ. வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பிரதேச செயலர் க. குணராசாவினால் திறந்து வைக்கப்படும்.

இன்று தொடக்கம் 28 ஆம் திகதி வரை இக்கண்காட்சி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

இறுதி நாளான 28 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு கருத்தரங்கும் மாலை 4 00 மணிக்கு நிறைவு விழாவும் நடைபெறும்.

நிறைவு விழாவுக்கு மேதகு ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் தலைமை வகிப்பார்.

(இ-30 51)

## விவசாய ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஜன 25

யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் ஜனவரி மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கட்கிழமை கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப் படவுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் மொத்தமாக

**லீலா**

**பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

கொள்வனவு செய்ய

**'உதயன்'**

நிறுவனத்தை நாடுங்கள்!

லீலா பஞ்சாங்க சித்திரக்கலண்டர் மற்றும் டயறிகளை விற்பனை செய்ய விரும்பும் பத்திரிகை முகவர்களும் ஏனையோரும் அலுவலகநேரத்தில் நாவலர் வீதியில் உள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்,

(சி/4000)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகபணியாளர் (பிரதம லிகிதர்)

**தோழி திருமதி ஐ. பவளமணி**

அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி பொன்னையா சவீனம்மா

அவர்களின் மறைவையிட்டு அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க கிளை

**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.**

(9200)

# மரண அறிவித்தல்கள்

### இராசலிங்கம் இரத்தினசிங்கம்

**(மனேஜர், மதுரா நகை மாடம், யாழ்ப்பாணம்)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த இராசலிங்கம் இரத்தினசிங்கம் 23-01-1997 மாலை அகால மரணமானார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக்கணவரும், நிரஞ்சா, இன்பஜா, சிந்துராஜன், தினேஸ்குமார், இந்திரஜித்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திருச்செல்வம், திருமதி தவமணி புண்ணியமூர்த்தி, செல்வராசா, திருமதி நல்லநாயகி குகநாதன் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**திருமதி இ. ஈஸ்வரி**
(மனைவி)

கந்தசுவாமி கோயிலடி,
இணுவில் மேற்கு.

(சி/3999)

### திருமதி கமலம் சின்னத்துரை

**(நயினாதீவு)**

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டிக்குளியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கமலம் சின்னத்துரை அவர்கள் 24-01-97 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரேசு—அமிர்தம் தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கந்தவனம், கந்தையா, நாகமுத்து, சிவகாமிப்பிள்ளை, சின்னம்மா, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறீகாந்தராஜா, காலஞ்சென்ற கனகராசா (நீர்ப்பாசனத் திணைக்களம்), கணேசு (அதிபர், மெ. மி த. க. பாடசாலை, ஆனைப்பந்தி), கிரிசாம்பாள் (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சந்திரன் (நிர்வாக அலுவலர், பிரதேச செயலகம், வேலணை), இரத்தினசபாபதி (இளைப்பாறிய ஆசிரியர்). அன்னசோதி, செல்வராணி (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை), செல்வராசா, செல்வமலர், சிவமணி, கதிர்காமலிங்கம், புண்ணியலிங்கம், உலகநாயகி, நவரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவஞானசுந்தரம் பிள்ளை (இளைப்பாறிய நிர்வாக அலுவலர், மன்னார்), காலஞ்சென்ற சிவானந்தராசா (ஆசிரியர்), மகேஸ்வரி, நாகேஸ்வரி, தணிகாசலம், சிவபாதசேகரம் (அதிபர், சி சி. த. க. பாடசாலை, கோண்டாவில்), யோகலட்சுமி ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-01-97) பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
**கே. கே. சந்திரன்**
(மருகர்)

32. விதானையார் வீதி,
சுண்டிகுளி,
யாழ்ப்பாணம்.

(44897)

**மேலும் மரண அறிவித்தல்கள்**
**2 ஆம் பக்கத்தில்**

## கப்பல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்தைப் பயன்படுத்தாவிட்டால் மீண்டும் புதிதாக விண்ணப்பம் சமர்பிக்க வேண்டும் என்றும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-3)

## கொக்குவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக் காலையே யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வேலைக்கு வந்து விட்டு மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இந்த சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுழிபுரத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது. இறந்தவரின் பெயர் விவரம் தெரியவரவில்லை.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் அடையாளம் காண்பதற்காகவும், மரணவிசாரணையின் பொருட்டும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது, மேலும் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது சுழிபுரத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த கணபதிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 80) தொல்புரம் பகுதியில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த இராசலிங்கம் ஸ்ரீராம் (வயது 24) சில்லாலைப்பகுதியில் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்த ஞானப்பிரகாசம் பாக்கியநாதன் (வயது 64) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10. 30 மணியளவில் மறைந்திருந்து தாக்கியபடையினர் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரைக் கொன்றுள்ளனர் என்றும் —

அவரது சடலமும் ரி-56 ரக துப்பாக்கியும் 2 கைக்குண்டுகள், ஒரு சயனைட் வில்லை என்பனவும் கைப்பற்றப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. (இ-3-4-15)

## பறவையுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இதே வேளை விமானப் படை நியமித்த குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறூப் கப்டன் சல்ஹாது தலைமையிலான இரு அங்கத்தவர்கள் கொண்ட இக்குழு இரண்டு வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்.

25 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த கிபிர் விமானம் கடந்த ஒரு வருட காலத்தில் 700 தடவைகள் யாழ். சென்று தாக்குதல்களில் ஈடுபட்டது என்றும் —

ஒரு முறைதானும் தொழில் நுட்பக் கோளாறு எதுவும் அதில் ஏற்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

விமானி இன்னமும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை என்றும் —

இதனால் அவரிடம் வாக்கு மூலம் பெற முடியவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை — விமானப் படையில் உள்ள ஏனைய கிபிர் விமானங்கள் பணி புரியும் சாத்தியம் உள்ளது என்று விமானப்படைத் தளபதி தெரிவித்தார். (இ-3-150)

# தரமற்ற தேயிலை விநியோகம்

வலி. தென். மேற்கு ஜன: 25

இலவச உலர் உணவு நிவாரணப் பொருள்களுடன் விநியோகிக்கப்படும் தேயிலைத் தூள் தரமற்றது எனப் புனர்வாழ்வு ஆலோசனை சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து விநியோகிக்கப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத தரம் குறைந்த இந்தத் தேயிலையை மக்கள் உபயோகிக்காமல் வீசிவிடுகின்றனர் என யாழ். செயலகத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# நிபந்தனை அற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளவு ஆராயப்பட்டுள்ளது. எமது தீர்வுத் திட்டம் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. சிங்கள மற்றும் ஏனைய இன மக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலோர் இத் தீர்வுத் திட்டத்தை ஏற்கும் நிலை உருவாகியுள்ளது.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்தோம். 8 மாதங்கள் பேச்சு வார்த்தை நடைபெற்றன. யுத்த நிறுத்தமும் இடம் பெற்றது. ஆனால் முடிவில் என்ன நடைபெற்றது என்பது நாங்கள் எல்லோரும் அறிந்த விடயமே.

விடுதலைப்புலிகளுடன் தற்போது நாங்கள் நிபந்தனைகள் இன்றிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் தயாரில்லை நாம் சில நிபந்தனைகளை விதித்துள்ளோம். அந்த நிபந்தனைகளுக்கேற்ப தேவை ஏற்படின் பொருத்தமான வேளையில் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளுவோம்.

கேள்வி: விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண முடியாது என்பதே சில அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். இது குறித்துத் தங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: எப்போதெனினும் விடுதலைப்புலிகளும் தீர்வைக் காண்பதில் இணைவதே நல்லது. ஆனால் விடுதலைப் புலிகள் அதற்கு உடன்படாவிடின் அவர்களைத் தமிழ் மக்கள் நிராகரிப்பார்கள் என்றநம்பிக்கை எனக்குண்டு. நாங்கள் தேவையான போது நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு மீண்டும் அழைப்பு விடுப்போம்.

கேள்வி: அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சி ஆதரவு அளிக்கும் போலத் தெரியவில்லை. இந்நிலையில் இந்தத் தீர்வுத் திட்டம் செயலாக்கம் பெறும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

பதில்: எதிர்க் கட்சி பிரச்சினைகள் எதுவுமின்றி இத்தீர்வுத் திட்டம் குறித்து ஒத்துழைப்பு வழங்காமல் இருப்பது புதுமையான ஒன்றல்ல.

இன்று அந்தக் கட்சி மாத்திரமே எதிர்க்கட்சியாக உள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய 11 கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்துள்ளன. குறிப்பாக தீர்வுத் திட்டம் தொடர்பாக இக்கட்சிகள் அரசின் நடவடிக்கையை ஆதரிக்கின்றன.

ஐ. தே. கட்சியின் முன்னாள் தலைவர் 1944 ஆம் ஆண்டில் இருந்தே தமிழர்களுக்கு எதிராக இனவாதப் போக்கை அனுசரித்து வந்தார். 1944 இல் சட்ட சபையில் சிங்கள, தமிழ் மொழிகளுக்கு சம அந்தஸ்தை வழங்கும் விதத்தில் இடதுசாரிகளுடன் இணைந்து எனது தந்தை கருத்தை உருவாக்கியபோது, ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தக் கருத்தை எதிர்த்ததுடன் சிங்களம் மட்டுமே என்ற கருத்தை முன்வைத்தார். இதன்பிறகு 1977 இல் இருந்து அந்தக் கட்சி தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை நாம் அறிவோம்.

ஒழுங்கமைக்கப்பட்ட மரணப் படையினரால் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். உயிரோடு கொளுத்தப்பட்டனர். தமிழர்களது கடைகள் கொளுத்தப்பட்டன. இப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒரு கட்சியை ஒரே முறையில் மனிதத் தன்மையுடன் சிந்திக்க வைக்கவோ, இத்தீர்வுத்திட்டத்திற்கு உடன்பாட்டைப் பெறவோ முடியாது.

இருப்பினும் நாங்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுவருகிறோம். அக்கட்சியில் உள்ள பலர் அரசியல் தீர்வே அறுதியானது என்பதை உணர்ந்துள்ளனர்.

நாட்டைப் பற்றி அவர்களுக்குச் சிறிதளவாவது அக்கறை இருக்குமாயின் – ஆட்சிக்கு வருவது மட்டுந்தான் தமது கொள்கை என்று அவர்கள் கொண்டிருக்காவிடின் சில வேளைகளில் அக்கட்சி இத்தீர்வுத்திட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்கக் கூடும். அவ்வாறான ஒத்துழைப்புக்கிடைக்காவிடின் எமக்கு மாற்றுவழிகள் உள்ளன. (அ-10)

## கைதான..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள்.

இந்தச் [illegible] ம்பவத்தோடு தொடர்[illegible] பிரயாண முகவர் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனையோர் சம்பந்தமாக தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சர்வதேச பொலீஸ் அமைப்பின் இலங்கைக் கிளை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நாடு திரும்பிய 29 இலங்கையர்களும் விசாரணைக்கென மிரியானவில் உள்ள வெளிநாட்டவர் தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் முஸ்லிம் ஏனையோர் தமிழர்கள்.

## உப விநியோகஸ்தர்கள் தேவை

★ (F)போல்கன் ரக அமோனியம் சல்பேற் உரம் மொத்த விலையில் விற்பனை செய்யவிரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்க.

★ (F) போல்கன் சிமெந்து - ரூ. 485/-

★ அரிசி, சீனி, கோழித்தீன் மற்றும் உணவுப் பொருள்கள் மொத்தமாக பருத்தித்துறை விநியோகத்திற்கான ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விவரங்களுக்கு;

**M. L. & CO.**

235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிநிதிகள்-

**ஈஸ்வரன்பிறதர்ஸ்.**

(44894)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 25-01-1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org